


மூளாய் ஊர்ப்பிறந்து வாழ்ந்து வளர்ந்து இறையடி சேர்ந்த

அன்பின் தாயார்

# அமரர் திருமதி பாக்கியம் செல்லையா அவர்களின்

நினைவுகளைச் சுமந்துவரும் நெஞ்சத்துநீங்கா

# நினைவுமலர்

13.04.2006

உ

சிவமயம்

மூளாய் ஊர்ப்பிறந்து வாழ்ந்து வளர்ந்து இறையடி
சேர்ந்த அன்பின் தாயார்

அமரர்

# திருமதி பாக்கியம் செல்லையா அவர்களின்

நினைவுகளைச் சுமந்துவரும் நெஞ்சத்துநீங்கா

## நினைவுமலர்

13.04.2006



மூளாயூர் வீதியெல்லாம் முத்துத்தேராக அசைந்துவந்த
தாளாத அன்பின் தாயார் பாக்கியம் என்னுமன்னை
நாளாக இங்கே வாழ்ந்து நானிலம் போற்றநின்று
ஆளானார் அவனடிக்கென்றே மலராக்கி வணங்கிடுவோம்.

நடமாடும் தெய்வமதாய்
நானிலத்தில் வாழ்ந்திட்டு
எல்லோரும் போற்றிடவே இறைவனடி
சேர்ந்திட்ட

# அமரர்
# அன்னை திருமதி. செல்லையா பாக்கியம்

அவர்களின்

## தாழினிற்கே இம்மலர் சமர்ப்பணமாக



**மெல்ல இத்தரையினிற்கோர் செல்ல மகளாகி
வல்லமையோடு நல்லறிவினையும் பெற்று
இல்லத்தரசியாராய் இருந்திடவே இத்தகையில்
செல்லையா நாயகனைச் சீர்கரம் பற்றி
எல்லோரும் போற்றிடவே மக்களையும் காத்திட்டு
பல்லோரும் போற்றப் பரமனடி சேர்ந்திட்ட
நல்மாதா நாம்போற்றும் பாக்கியத்தாய் தாழினிற்கே
கல்வெட்டாம் இம்மலர் சமற்பணமாய் ஏற்றிடுவீர்**

இவ்வண்ணம்
**குடும்பத்தினர்**

உ

சிவமயம்

"வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



அன்னை மடியில்
08/05/1924

ஆண்டவன் அடியில்
14/03/2006

விதியென்று நீசென்ற திதிவரும் நாள்வரை
கதியென்று விழிவைத்துக் காத்திருப்போம்

# அமரர்
# திருமதி செல்லையா பாக்கியம்

## திதி வெண்பா

பார்த்திப ஆண்டிலொரு பௌர்ணமி நாளதுவின்
சீர்தவளும் மாசிப்பூரமெனும் திதியதுவாம் - நம்
ஊர்பூத்த உத்தமியார் பாக்கியமெனும் தாயார்
தேர்ஏறித் தெய்வீகம்ஆனதிதி என்றேதுதி

அம்மையார்

# அமரர் செல்லையா பாக்கியம் அவர்களின்

## ஆத்ம ஈடேற்றத்திற்காக பஞ்சபுராணம் ஓதுவோமாக

திருச்சிற்றம்பலம்

### விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிறம்பிளை போலுமெயிற்றனை
நந்தமகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

### தேவாரம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக்கண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர்ர் மேவிய புண்ணியனே!

### திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலம்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொரு பெருக்கி
உய்ப்பிலா ஆனந்தமாய்
தேனினைச் சொரிந்து புறம்புறந்திருந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

### திருவிசைப்பா

ஒளி வளர் விளக்கேயுளப் பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்து தோருணர்வே
தெளிவளர் பளிங்கின்றிரன் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே

அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின் குழாம்புகுந்து
அண்டங்காந்தபொருள் அளவிலதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டுமின்றும் என்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

அன்னலே எனையாண்டு கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள்புரி வேதநாயகனே
கண்ணினாள் றிருக் கயிரையிருந்தநின் கோலம்
நண்ணிநான்தொழ நயந்தருள புரியெனப் பணிந்தார்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழிபேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீயருளல் வேண்டும்
ஆதிஅருணாசலம் அமர்ந்தபெருமாளே!
திருச்சிற்றம்பலம்

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# அமரர் திருமதி பாக்கியம் செல்லையா

## அவர்களின்

# வரலாற்றுப் பதிவு

பாக்கியம் என்றோர் அன்னை பாரினில் பிறந்திலரேல்
காக்கின்ற கரங்களைநாம் கண்களால் கண்டுமிரோம்
நோக்கிடும் தினசகளெல்லாமந்த நூதன அம்மையாரின்
பூக்கின்ற முகமேயன்றி வேறொன்றும் கண்டிலேன்யான்!

*******

ஈழமணித் திருநாட்டின் யாழ்ப்பாணத்திலே முத்தமிழ் சிறந்து விழங்குகின்ற முளாயூரினிலே நாடும் ஊரும் வீடும் போற்ற வாழ்ந்தவர்கள் அமரர் வேலுப்பிள்ளை தெய்வானை தம்பதிகளாவர். இவர்கள் இல்வாழ்வின் இனிய தத்துவங்களை யெல்லாம் கற்றுணர்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழும் நாளில் இல்வாழ்க்கையின் இனிய செல்வங்களாக இரு பெண்பிள்ளைகளைப் பெற்றெடுத்து பேணி வளர்த்தார்கள். இவர்களிலே மூத்தவர் பாக்கியம் அவர்கள். இளையவர் மகேஸ்வரி (சின்னமணி) அவர்களாவர்.

பாக்கியம் அவர்கள் சின்ன வயதிலே சிறப்புக்கள் பலவும பெற்று அழகும், அறிவும் ஆற்றலும் நிரம்பியவராக தனது அன்புச் சகோதரி மகேஸ்வரி அவர்களுக்கு அனுசர ணையாகவும் பெற்றோர்க்கு பெருமை சேர்பவராகவும் வாழ்ந்து வந்தார். வண்ணத்தமிழ்ப் பெண்ணாக அவர் வையத்துள் வாழ்கின்றவேளை அவருக்கு வாழ்க்கைத் துணையாக கண்ணியமானதோர் குடும்பத்தின் காளையாத் திகழ்ந்த செல்லையா அவர்களை பெற்றோர்கள் மணமகனாகத் தேர்ந் தெடுத்து இல்வாழ்வில் இணைத்தனர்.

இல் வாழ்வில் இணைந்த அம்மையார் பாக்கியம் அவர்கள் இல்வாழ்வின் சிறப்புக்களையெல்லாம் அறிந்து கொண்டு வாழ்க்கை நடாத்தி வந்தார். ஒரு சிறந்த இல்லாளாக

திருவள்ளுவர் கூறுவது போல "மனைத்தக்க மாண்புடை யளாகித் தனைத்கொண்டாள் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்பதற்கிணங்க நடந்து கொண்டு வந்தார். அம்மையார் பாக்கியம் செல்லையா தம்பதியர்கள் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த நாளிலே இனிய இல்வாழ்க்கையின் சான்றாக பிள்ளைகள் இருவரைப் பெற்று பெருமையுற்றனர். மகன் ஆனந்த கிருஸ்ணகுமாரும், அருமைமகள் சரஸ்வதியும் பெற்றோர்களோடு சேர்ந்து நல்லதோர் குடும்பமாக நான்கு அன்றில்கள் ஒன்றான கூடாக பாற்போர் வியக்கும் வகையிலே வாழ்ந்து வந்தார்கள்.

அம்மையாரின் மக்கள் பட்டுச் சிறகடித்து சிட்டுக் குருவிகளாக சிறகடிக்கும் சின்னப் பருவத்திலேயே தந்தையார் செல்லையா அவர்கள் அம்மையார் பாக்கியம் அவர்களை விதவையாக்கிவிட்டு இறையடி சோந்தார். கணவனை இழந்த துயரம் ஒரு புறத்திலே வேதனையைத் தர பிள்ளைகளை வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு மறுபுறத்திலே மேலோங்கி நிற்க அம்மையார் அவர்கள் இரவுபகல் பாராது மிகவும் கண்ணியத்தோடு ஒருதாயார் எப்படி இருக்க வேண்டு மென்பதற்கு முன்னுதாரணமாக உழைத்து உழைத்து பிள்ளைகளைக் காத்து வந்தார். தன் பிள்ளைகளோடு தன்னுடைய சகோதரியின் பிள்ளைகள்மீதும் தானாக பாசம் கொண்டு அவர்களையும் தோள்மீதும் மார்மீதும் மடிமீதும் சுமந்து பாதுகாத்தார்.

அமரர் பாக்கியம் அவர்கள் தன்னுடைய அருமைப் புதல்வன் ஆனந்தகிருஸ்ணகுமார் அவர்களை கல்வியிலே வல்லவனாக்கி கலையினோடு சங்கீத ஞானத்தையும் ஊட்டி செம்மையாக வளர்த்தெடுத்து சிவகாமவல்லி அவர்களை திருமணம் செய்து கொடுத்து அவரைத் தனக்கு மருமகளு மாக்கி ரகுநாதன், பவினா, சுதன், கமலவினோதன், பத்மவினோதினி என்பவர்களைப் பேரக் குழந்தைகளாகவும் கண்டு மகிழ்ந்தார்.

மகள் சரஸ்வதி அவர்களை நாகேந்திரம் அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்து அவரைத் தன் மருமகனுமாக்கியதோடு அம்பிகை, யோகாம்பிகை, கோடீஸ்வரன், அஞ்சலாதேவி, ரதிதேவி ஆகியோரைப் பேரர்களாகவும், அபிராம், அஞ்சரன், செயந்தன், அஞ்சலா, நிலவன், சிவப்பிரியா ஆகியோரைப் பூட்டப் பிள்ளைகளாகவும் கண்டு களிப்புற்றார்.

இல்வாழ்க்கை சிறிதுகாலமே வாழ்ந்த அம்மையார் கணவனை இழந்ததும் வறுமையின் பிடியிலிருந்து தன்னை மீட்டெடுத்து பிள்ளைகளை வளர்ப்பதற்காக வியர்வை சிந்தி உழைத்தார். அம்மையாரின் அயராத உழைப்பினால் தலை நிமிர்ந்த பிள்ளைகள் சிறந்த நிலையை அடைந்தார்கள். பிள்ளைகளுக்காகவும் மருமக்களுக்காகவும், பேரப்பிள்ளைகளுக் காகவும் பூட்டப்பிள்ளைகளுக்காகவும், பெறாமக்களுக்காகவும் சகோதரின் பாசத்திற்காகவும் அம்மையார் இம்மண்ணில் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்தார்.

இறைபக்தி உடையவராகவும் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்மீதும் முத்துக்குமாரசுவாமி மீதும் அளப்பெரும் பற்றுடையவராகவும் வாழ்ந்து வந்தார். பிறரை நேசிக்கின்ற பண்பு, மற்றவரை அனுசரித்து நடத்தல், கடின உழைப்பு, கலங்காத உள்ளம், தியாக உணர்வு, வஞ்சகமற்ற தன்மை இவையெல்லாம் அம்மையார் பாக்கியம் அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவையாகும்.

மனித நேயம், ஜீவகாருண்யம், சகிப்புத்தன்மை போன்றவற்றை மூலதனமாக்கி அம்மையார் பாக்கியம் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை மெல்ல மெல்ல உயர்ந்து வாழ்க்கையின் உச்சிக்கே சென்றது. ஆனால் எல்லை இவ்வளவுதான் என்று காலன் எண்ணினான் போலும்.

அன்று மாசி மாதத்து பௌர்ணமிநேரம் பூர நட்சத்திரம் கூடியவேளை மானிடத்தை நேசித்த மாபெரும் தாயார் அம்மையார் பாக்கியம் அவர்கள் எல்லாவிதமான

பாக்கியங்களையம் பெற்று இறைவனுடைய அழைப்பின் பேரில் கூடிக்குலாவிய உறவுகளையும் தேடிக்கிசைத்த செல்வங் களையும் ஆண்டு அனுபவியுங்கள் என்று விட்டுவிட்டு பாசத்து விளிகளெல்லாம் நீர்வழிய இவ்வுலகை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

அம்மையார் திருமதி பாக்கியம் செல்லையா அவர்களின் ஆத்மா சாந்திபெறுவதாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(தாய்மை என்பது தற்செயலானதோர் பாத்திரமல்ல. தெய்வத்திற்கு ஈடானது. நாம் குறியிருந்த கோயிலது. நாம் தாயோடு வாழக்கிடைத்த காலமும் ஒரு வரப்பிரசாதமாகும். அதை நாம் எப்போது உணர்வோமானால் அவர் நம்மை விட்டுப் பிரிந்த பின்புதான். எனவே நாம் வாழும் காலத்திலேயே தாயைத் தெய்வமாக மதித்து நடப்போமாக)



# குடியிருந்த கோயிலை மறக்காத குழந்தைகள்

தந்தையை இழந்து நாம் தவித்திடத்தாயே
கந்தையைக் கட்டியேனும கண்ணியங்கள் காத்து
வெந்தணல் வேகியெ வேதனங்கள் பெற்று எமை
சிந்தையில் காத்தாயே மறப்போமோ தாயே!

விடிவெள்ளி எழுமுன்பே எழுந்தெங்கள் தாயே
பிடிதன்னுள் மாவிட்டுப் பலகாரம்செய்து
குடிகாக்க ஊருக்கு உணவாக்கிவிட்டு எமை
மடிமீது காத்தாயே மறப்போமோ தாயே!

ஊராற்கு சமமாக எமையெண்ணித்தாயே
சீரர்டி சிறப்பூட்டி பாராட்டி வளர்த்து
பேராக்கி வைத்திடப் பெருமின்னல் பட்டுஎமை
நேராக்கிவைத்தாயே மறப்போமோ தாயே!

மடிநிறையப் பலகாரம் கட்டிவந்து தாயே
துடிக்கின்ற வேளையேலாம் அருகிருந்துதந்து
படிக்கின்ற போதெமக்கு புத்தகமாய் இருந்து எமை
முடிசூடவைத்தாயெ மறப்போமோ தாயே!

பஞ்சம் பசி நாங்கள் அறியாமல் தாயே
அஞ்சி அஞ்சித் துன்பம் அனுபவித்து வந்து
விஞ்சு புகழோடின்று உருவாக்கி விட்டு எமை
தஞ்சமெனத் திகழ்ந்தாயே மறப்போமா தாயே!

அம்மையாரின்
அன்புப் பிள்ளைகள்

## மாமியாரை எண்ணித் தவிக்கும் மருமக்கள்

பெற்றதாய் போல எமைப் பேணியே காத்திட்ட
நற்றுணையே நாம் போற்றும் பாக்கியத்தாயே
உற்றதுணை நீயென்று உள்ளவரை நம்பியே நாம்
இற்றைவரை இருந்தோம் விடரேதுமறியோம்
பற்றுடைய மாமியே வற்றிடாத கற்பகமே
மற்றவரறியா மாணிக்க மலையே
செற்றவர் புரம் சென்றோ செற்ற எம் சிவனடைந்தாய்
பொற்பதமே தொழுகின்றோம் வாராய்

## காத்திரம் காத்த நம் பேத்தியாரைத் தேடும் பேரப்பிள்ளைகள்

ஊர் போற்றும் உத்தமியெ பார்போற்றும் பாக்கியமே
சீர்தூக்க வந்த எங்கள் பேத்தியோரே
மார்போடு எமையணைத்து மாயங்கள் பலசெய்து
நீர்சொன்ன வார்த்தையெல்லாம் மாழவில்லை
கார்மேகம் போலவந்து கருணைமழை பொழிந்திட்டு
வார்ஓடி வடிந்துகடல்அடைவதுபோல்
தேர்ஏறித் தெருவெலாம் வருந்துவார் வந்திடவே
யார்வீடு சென்றாய் நீ வாராய்!

## வளர்ந்து வரும் வாரிசுகள்
## வருந்துவதைப் பாரீர் பூட்டப்பிள்ளைகள்

பாட்டி என்று ஒரு பந்தத்தைக் காட்டியமை
ஆட்டிப்படைத்த அற்புதமே பாக்கியமே
ஊட்டியமை வளர்த்து நீ காட்டிய பாதையிலே
ஈட்டிய புகழையெல்லாம் இருந்திங்கு பார்த்திடாமல்
கூட்டிலே செல்லவந்த காலனுடன் கைப்பிடித்து
வீட்டைவிட்டு விரைந்ததுதான் விதிவழியோ வேறோ
கோட்டினைக் கீறிவிட்டு இரு என்று சொல்ல இருந்தோம்
பாட்டியே மீண்டும்நீ கரம்நீட்டி வாராயோ!

## கூடிப்பிறந்தோர் சோடிப்பறவை
## சோடியை இழந்தோ
## சகோதரியின் உள்ளக் குமுறல்

உடன்பிறப்பே உறுதுணையே உற்றஎன் அக்காளே
தடன்செய்து எனைக்காத்த கண்ணகியே
குடந்தனிலே பால்போலும் குணத்துடனே நீயிருக்க
திடமுடனே நானிருந்தேன் பாக்கியமே இன்று
முடமாகிப் போனதுபோல் மூலையிலே கிடந்திடவோ
இடமாக்கிச் சென்றாய்நீ எனைவிட்டேதாயே
நடமாடி மீண்டும் நான் நானிலத்தில் தேடியுனை
கடன்செய்வேன் வந்தெனையே சேர்வாய்



## பெற்ற பிள்ளைகளுக்கும் மேலாக இருந்த பெறாமக்களின் உள்ளத்து உழைச்சல்

அன்னையிலும் மேலான பெரியன்னை நீயே
உன்னையே எமக்கீந்தாய் தாயே
கண்ணை இமை காப்பதுபோல் எமையெல்லாம்காத்தன்று
விண்ணாகி மண்ணாகி நின்றாய்
தன்னலமே இல்லாத தாயாகி எங்களை நீ
உன்மக்கள் போலவே ஏந்திவளர்த்தாய்
சென்ற இடம் ஏதம்மா பெரியம்மா பாக்கியமே
என்றெனிநாம் உனைக்காண்போம் வாராய்!

## உற்றார் உறவினர் ஊர்மக்களது உள்ளக் குமுறல்

பாக்கியம் என்னுமோர் வாக்கியம் எமக்கிங்கு
ஊக்கமும் தந்ததோர் உணர்வன்றோ
நோக்கிய திசையெலாம் தோன்றிய முகமது
காக்கின்ற கடவுளின் வடிவன்றோ
ஆக்கிய உணவினை அன்போடு அளித்திடும்
பாக்கியம் நாம் செய்த பலனன்றோ அவர்
தாக்கிய நோயினால் தனரவிட்டு மறைந்ததும்
தூக்கிய பாத்திரம் முடிந்ததென்றோ!



மறைந்த எம்மன்னை மறுபடியும் பிறந்து
சேயாக வந்திடுவார் தேற்றம் கொள்வீர்

## தேற்றம்

வேறுப்பிள்ளையாற்கோர் மகளாக மலர்ந்து
செல்லையரோடு உயர் இல்வாழ்வில் திளைத்து
கல்லும் கசிந்துருக காலத்தைக் கடந்திட்ட
வல்ல எம்தாயார் பாக்கியம் அன்னை
இல்லையின்றிந்த எல்லையிலென் றெண்ணி
சொல்யழ வேண்டாம் சோகத்தை துறந்திடுவீர்
அல்லும் பகலுமவர் ஆண்டவனை வேண்டியதால்
நல்லைக்குரனடி நண்ணினார் தேறுடுவீர்!

(நிலம், நீர். தீ, காற்று, ஆகாயம் என்பன ஐம்புதங்கள் மட்டுமல்ல ஒரு தாய் எம்மைக் காப்பதற்கு தாயிடம் இருக்கின்ற உறுப்புக்கள் போல இறைவனிடம் எம்மைக் காப்பதற்காக இருக்கின்ற உறுப்புக்களேயாகும். எனவே இறைவனைத் தேடி தேடி காணமுடியாமல் இறைவனே இல்லையென்ற முடிவுக்கு வரமுன்னர் இவை இறைவனின் உறுப்புக்கள் என்பதை உணர்ந்து கொண்டு அவற்றை மதித்து வணங்கப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இறைவன் தன்னுடைய முழமையான தோற்றத்தை உங்களுக்குக் காட்டுவான்)



மூளாயூர் முத்துக்குமாரசுவாமி சித்திவிநாயகப்
பெருமான் அமரர் திருமதி பாக்கியம் செல்லையா
அவர்களின் ஆத்மாவை தம்மோடு
இணைத்துக் கொண்டவர்கள்

தந்ததெல்லாம் கந்தன் திருக்கரமே
அவன் வந்த இடம் எந்தனுக்கு சொந்த இடமே
பந்தமெல்லாம் எனக்கு தந்தமுகமே
அவன் வந்த இடம் மூளாயூர் வதிரன்புலமே!
(தந்ததெல்லாம் கந்த திருக்கரமே)

நொந்தமனம் யாவினிற்கும் ஆறுமுகமே
வந்து சந்தணமாய் மனங்கவரும் நாமமதுவே
அந்தமுகம் ஆனைமுகன் தந்தமுகமே
அவன் வந்து தினம் வாழுகின்ற வதிரன்புலமே!
(தந்ததெல்லாம் கந்த திருக்கரமே)

சிந்தனைக்கு சிறந்த இடம் கந்தனிடமே
சிந்தும் அழகல்லாம் கொண்டிருக்கும் மைந்தனிடமே
அந்த இடம் தந்தமுகன் அருளுமிடமே
அவன் வந்தருளும் மூளாயூர் வதிரன்புலமே!
(தந்ததெல்லாம் கந்த திருக்கரமே)

காந்தமெனக் கவர்ந்திழுக்கும் கந்தனருளே
அந்த ஆறுபடை வீடுடையோன் அன்புமனமே
ஐந்து கரம் நீட்டுமெமை அணைத்திடவே
அவன் வந்துறையும் மூளாயூர் வதிரன்புலமே!
(தந்ததெல்லாம் கந்த திருக்கரமெ)

சுந்தரமே வடிவான வேலவனே
தொந்திக் கணபதியோடிணைந்தருளும் அற்புதமே
வந்துதினம் நொந்துமனம் வேண்டுவோற்கு
கந்தன் கணபதியோவான் வதிரன்புலமே!
(தந்ததெல்லாம் கந்த திருக்கரமே)

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

வாழி நம் மூளாயூர் மூத்தோன் வாழி
வள்ளியொடு தெய்வானை வேலோன்வாழி
நண்ணியிறை பூசைசெய்யும் அந்தணர்கள் வாழி
நறுஞ்சைவ நெறிவளர்க்கும் மேலோர் வாழி
எண்ணிறைந்த பாட்டிசைக்கும் புலவோர் வாழி
ஏற்புடைனே கேட்டருளும் அடியோர் வாழி
வாழிநம் வதிரன்புலோத் தலமூர் வாழி
வளர்சைவ நெறிவாழி வாழி வாழி!

**(வாழ்க்கையிலே ஒரு மனிதனுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுபவை உணவு, உடை, உறைவிடம், கல்வி என்பனவாகும். அவற்றை எவனொருவன் மதிக்காமல் உதா சீனப்படுத்துகின்றானோ அவன் அதற்காக பின்னொரு காலத்தில் தவங்கிடக்க வேண்டி வரும். அதனால் உங்களுக்கு யாராவது உணவு, உடை, உறைவிடம், கல்வி போன்றவற்றைத் தந்தால் பெரிது சிறிது பாராமல் நன்றியோடு ஏற்றுக் கொள்ளப் பழகுங்கள். இது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்குரியதோர் வழிவகையாகும்)**



# உறவுகள் மேம்பட

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், தேவை இல்லாமலும், பின் விளைவு அறியாமலும், பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துதான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று கடைசிவரை வாதாடாதீர்கள்.
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல், இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள், அற்ப விஷயங்களை பெரிது படுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன்வாருங்கள்.

## இவர்களிற்கு இதில் பெருமை

| | |
|---|---|
| கர்ணன் | - கொடை |
| ஔவையார் | - கல்வி |
| விஜயன் | - வில்வித்தை |
| அனுமான் | - சொல்லின்செல்வன் |
| அரிச்சந்திரன் | - வாய்மை |
| நெப்போலியன் | - வீரம் |
| கண்ணகி | - கற்பு |
| மணிமேகலை | - துறவு |
| பரதன் | - சகோதரபாசம் |

## முக்கியமானவை மூன்று

| | |
|---|---|
| மதிக்க வேண்டிய மூன்று | - முதுமையானோர், மார்க்கம், சட்டம் |
| நேசிக்க வேண்டிய மூன்று | - நேர்மை, தூய்மை, கடின உழைப்பு |
| போற்ற வேண்டிய மூன்று | - அறிவு, அழகு, பண்பு |
| பேணி வளர்க்க வேண்டிய மூன்று | - திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி |
| தவிர்க்க வேண்டிய மூன்று | - புகைத்தல், மதுவருந்துதல், சூதாடல் |
| அடக்க வேண்டிய மூன்று | - நா, சோதனை, கோபம் |
| கட்டாயம் கவனிக்க வேண்டிய மூன்று | - பேச்சு, நடைமுறை, செயல்கள் |
| ஆதரிக்க வேண்டிய மூன்று | - வாக்குறுதி, நட்பு, அன்பு |
| ஒழிக்க வேண்டிய மூன்று | - திருட்டு, சோம்பல், பொய் |
| விரும்ப வேண்டிய மூன்று | - கருணை, நற்குணம், மனஅமைதி |
| வெறுக்க வேண்டிய மூன்று | - பெருமை, அநிதி, வாக்குமீறல் |
| தப்பித்துக் கொள்ள வேண்டிய மூன்று | - தீயஎண்ணம், பிடிவாதம், பொறாமை |
| அஞ்ச வேண்டிய மூன்று | - களவு, கோள், பொய் |
| எதிர் கொள்ள வேண்டிய மூன்று | - கவலை, பயணம், மரணம் |
| போரிட வேண்டிய மூன்று | - தேசம், கண்ணியம், நட்பு |

# வைத்தியக் குறிப்புக்கள்

காதுக்குத்து - தயிர்வளைச் சாறு காதில் விடவும், நல்லெண்ணை தேங்காய் எண்ணை பூமத்தைச்சாறு சமன்காய்ச்சி காதில் விடவும்.

காதுசீழ் - வேப்பெண்ணை விடவும்

உண்ணாக்கு - நவச்சாரம் தூள் பூசவும்

தொண்டைநோவு - வேப்பெண்ணை கற்பூரம் சூடாக்கி விடவும்

ஆணிமுள் - விழாம்பழம், சிப்பி, சுண்ணாம்பு பிசைந்து விடவும் உழுக்கு- மஞ்சள்மா, கறிஉப்பு, தேங்காய் பூ வறுத்து பொட்டளியில் பூசவும்

முழங்கால்வீக்கம்:- குரக்கன் மா, சாம்பல், உப்பு, ஆட்டுப்புழுக்கை கற்றாளம் சாறு விட்டரைத்து கட்டவும்.

நாசியில் இரத்தம் - மாதுளம்பூ, சாறு குடிக்கவும்

பல்வலி - புளி, உப்பு, மிளகு அரைத்து பல்லில் அடைக்கவும் சூடம், வால்மிளகு, நெச்சிதுளிர் அடைக்கவும், அவுரிவேர் குடிநீர் கொப்பளிக்கலாம்.

இரத்தப்பெருக்கு - ஒதியம் பட்டை, மிளகு, சீனி இடித்துக் கட்டவும் இடையே தண்ணீர் விடவும்.

மாதவிடாய் - நாவல்பட்டை, பசுதயிர் துவைத்து சந்தனம் கலந்து குடிக்கவும்.

செங்கண்மாரி - கீழ்வாய் நெல்லிசாறும் பசும்பாலும் கலந்து குடிக்கவும்.

மாந்தம் - வேற்கொம்பு, வசம்பு, உள்ளி, கடுக்காய், இந்துப்பு கருஞ்சீரகம் வேப்பங்குர், அசமதாகம், உலுவா, மல்லி, அரிசி சமன் வறுக்கவும் அதில் தண்ணீர் விட்டுக் காய்ச்சி குடிக்கவும்.

கட்டு - அமுக்கரா, செஞ்சந்தனம் அரைத்து தேசிப்புளி விட்டுப் பூசவும், சவுக்காரம், சுண்ணாம்பு (காரம்)

மூலமுளை - வட்டதுத்தி இலையை ஆமணக்கு எண்ணையில் வதக்கி கட்டவும்.

சலக்கடுப்பு - நற்சீரகம், வெந்தயம் வற்றாக்காச்சிக் குடிக்கவும், முள்ளங்கிச் சாறும் குடிக்கலாம்

01. விற்றமின் குறைவால் ஏற்படும் நோய்கள்

i) விற்றமின் A - மாலைக்கண்

ii) விற்றமின் B - பெரிபெரி

iii) விற்றமின் C - ஸ்கேபி

iv) விற்றமின் D - என்புருக்கி

02. மனித உடலின் சாதாரண வெப்பநிலை - பரனைற் $98.4^{0}F$

செல்சியஸ் $36.8^{0}F$

03. மருத்துவத்தின் தந்தை - ஹிப்போ கிறடீஸ்

04. முதிர்ச்சியடைந்த மனிதனில் காணப்படும் என்புகள் - 206

05. மனித உடலில் உள்ள மிகப்பெரிய சுரப்பி - ஈரல்

06. மனிதர்களின் சராசரி நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 72 தடவைகள்

பெண்களின் நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 78 - 82 தடவைகள்

ஆண்களின் நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 70 – 72 தடவைகள்

07. உலகில் முதல் பெண்தாதி என்ற பெருமையை இத்தாலி நாட்டைச் சேர்ந்த புளோரன்ஸ் நைட்டிங்கேள் பெறுகிறார். இவரை விளக்கேந்திய பெருமாட்டி எனவும் தற்கால தாதிச் சேவையின் தாய் எனவும் போற்றுகின்றனர்.

08. இன்ரநெற் (Internet)

பல்லாயிரக்கணக்கான கணனிகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட வலையமைப்பு Internet ஆகும். சர்வதேச கணனிகளின் கூட்டமைப்பு எனவும் இன்ரர்நெற்றை அழைக்கலாம்.

International Network என்பதன் சுருக்கமே Internet ஆகும்.

09. ஈமெயில் (E – Mail)

கணனியை உபயோகித்து இணையத்தினூடாக கடிதத்தை வேறு இடத்திற்கு அனுப்புவதையே ஈமெயில் (E – mail) என அழைக்கின்றோம். Electronic Mail (இலத்திரனியல்) தபால் என்பதன் சுருக்கமே E – Mail ஆகும்.

10. சிலந்திக்கு 08 கண்கள் உண்டு.

11. மனிதனது ஆறு அறிவுகள் - உணர்ந்தறிவு, சுவைத்தறிவு, பார்த்தறிவு, முகர்ந்தறிவு, கேட்டறிவு, பகுத்தறிவு



அமரர் திருமதி. பாக்கியம் செல்லையா அவர்களின்

# வம்சாவழி

## வேலுப்பிள்ளை தெய்வானை

### பாக்கியம் செல்லையா

- ஆனந்தகிருஸ்ணகுமார் சிவகாமவல்லி
  - ரகுநாதன்
  - பவானி
  - சுதன்
  - கமலவினோதன்
  - பத்மவினோதினி
- சரஸ்வதி நாகேந்திரம்
  - அம்பிகை
  - யோகாம்பிகை உதயலிங்கம்
    - அபிராம்
    - அஞ்சரன்
    - செயந்தன்
  - கோடீஸ்வரன் துளசி
    - அஞ்சலா
    - நிலவன்
  - அஞ்சலாதேவி சிதம்பரேஸ்வரன்
    - சிவப்பிரியா
  - ரதிதேவி

### மகேஸ்வரி (சின்னமணி) நடராசா

பெறாமக்கள்

- ந. நாகராஜா (மூளாய்)
- ந. கைலாயபிள்ளை (ஜேர்மன்)
- ந. வரதராஜா (சுவிஸ்)
- சி. தங்கமலர் (கனடா)
- ந. சிவலிங்கராஜா (சுவிஸ்)
- ச. புஸ்பமலர் (சுவிஸ்)
- யோ. அன்னமலர் (கனடா)
- ந. முகுந்தராஜா (கனடா)

# நன்றி கூறுகின்றோம்.




எமது குடும்பத் தலைவியும் பாசத்திற்குரிய தாயருமாகிய
திருமதி பாக்கியம் செல்லையா அவர்கள் எம்மையெல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு இறைவனடி சேர்ந்த போது
செய்திகேட்டு வந்து எமது துன்ப துயரங்களில் பங்கு
கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும் இறுதிக்
கிரியைகளின் போது கண்ணீர் அஞ்சலிகள் மலர்
வளையங்கள் மூலம் இறுதி ஊர்வலத்தின் போது மயானம்
வரை வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும்,
வெளியூர்களிலிருந்தும் சிரமத்தைப் பாராமல் வருகை
தந்து வருத்தம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்
கிரியைகளின் போது எல்லா வகையான உதவிகள்
ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் இன்றைய
அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கு கொண்ட அமரர்
அவர்களின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்தித்து
உதவியவர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியையும்
வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்
நன்றி வணக்கம்

இங்ஙனம்,

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

துரா அச்சகம் கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறின்ட்
138, நாவலர் வீதி, யாழ்ப்பாண (நாவலர் பாடசாலை முன்பாக) T. P. 2881




தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P 2881